**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை – திரு.மு.ஜானகிராமன், இளநிலை உதவியாளர், த/பெ. திரு.பி.முனியப்பன், பெரும்பள்ளம் ஆரம்ப சுகாதார நிலையம், பழனி சுகாதாரப் பகுதி மாவட்டம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மருத்துவம் –மக்கள் நல்வாழ்வுத் (ஏபி1) துறை**

அரசாணை (2டி) எண்.144 நாள்.30.12.2021

பிலவ, மார்கழி – 15
திருவள்ளுவர் ஆண்டு 2052

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாயப்புத் துறை, நாள் 23.01.2020.
3. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கடித எண்.44192/ப.தொ.4/இரு.3/2019, நாள் 12.11.2021.

******

**ஆணை:**

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் திண்டுக்கல் சுகாதாரப் பகுதி மாவட்டம், சித்தையன்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவப் பணியாளராகப் பணியாற்றி வரும் போது 29.04.2007 அன்று பணியிடை மரணமடைந்த திரு.பி.முனியப்பன் என்பவரின் மகன் திரு.மு.ஜானகிராமன் என்பவர் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு 04.12.2019 அன்று முற்பகல் பழனி சுகாதாரப் பகுதி மாவட்டம், பெரும்பள்ளம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியில் இணைந்தார் என்று தெரிவித்து, தனியரின் தற்காலிக பணியினை, அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் இணைந்த நாளான 04.12.2019 அன்று முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

Scanned with CamScanner

2. அரசு, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநரின் கருத்துருவினை, 03.08.2010 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் கடித எண்.19205/க்யூ1/2010 மற்றும் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை ஆகியவற்றில் அறிவுறுத்தியுள்ளவாறு, சான்றிதழ்கள் / ஆவணங்கள் ஆகியவற்றுடன் ஆய்வு செய்தபோது, திரு.மு.ஜானகிராமன் என்பவர் கருணை அடிப்படை பணி நியமனம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளார் என்பது தெரிய வருகிறது.

3. எனவே பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டு பழனி சுகாதாரப் பகுதி மாவட்டம், பெரும்பள்ளம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிந்து வரும் திரு.மு.ஜானகிராமன் என்பவரின் தற்காலிகப் பணியினை, குறும வயது குறித்து அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020ற்கு விலக்களித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, (தமிழ்நாடு சட்டம் 14/2016)இல், சட்டப் பிரிவு 58இன்கீழ் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி சட்டப் பிரிவு 20(6)(b) மற்றும் 28(2) ஆகியவற்றினை தனியர் பொருட்டு தளர்வு செய்து, தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் இணைந்த நாளான 04.12.2019 அன்று முற்பகல் முதல் வரன்முறை செய்து, பணப்பலன்களை பணி நியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு பெற்று வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-இல் பிரிவு 58-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.மு.ஜானகிராமன் என்பவரின் தற்காலிகப் பணிநியமனத்தினை அவர் பணியில் இணைந்த நாளான 04.12.2019 அன்று முற்பகல் முதல் வரன்முறை செய்து பணப்பலன்களை பணிநியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு பெற்று வழங்க ஏதுவாக மேற்படி சட்டத்தின் பிரிவுகள் 20(6)(b) மற்றும் 28(2) ஆகியவற்றினை திரு.மு.ஜானகிராமன் பொருட்டு தளர்த்தி ஆணையிடுகிறார்.

5. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.4552/க்யூ1/2021, நாள் 20.04.2021 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகத் சீர்த்திருத்தத் துறையின் அ.சா.எண்.12990/ஜி2/2021-1, நாள் 17.05.2021 ஆகியவற்றின் ஒப்புதலோடு இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை- 600 006.

Scanned with CamScanner

தனியர், (இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை,
சென்னை-600 006 வழியாக.)
மாநிலக் கணக்காயர், சென்னை-600 018.
மாவட்ட கருவூல அலுவலர், கோயம்புத்தூர் மாவட்டம்.

**நகல்**

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவு பிரிவு) துறை, சென்னை-600 009.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

D. [signature] 12/01/2022
பிரிவு அலுவலர்.
11/1/22

Scanned with CamScanner